# நூலகவியல்

## காலாண்டுச் சஞ்சிகை

## NOOLAHAVIYAL - Quarterly



- இலங்கையின் பொது நூலக சேவை
- காங்கிரஸ் நூலக வகுப்பு முறை
- பாடசாலை நூலகங்கள்
- யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையம்

ஆசிரியர்: என். செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகவியல்

(காலாண்டுச் சஞ்சிகை)

மலர் 4 இதழ் 3 மார்ச் 1989

இந்த இதழில் .....

(1) இலங்கையின் பொதுநூலக சேவை: புதிய கண்ணோட்டம். 01
- ஈஸ்வரி கொறயா

(2) காங்கிரஸ் நூலக வகுப்பு முறை. 12
- கலாநிதி வே. இ. பாக்கியநாதன்

(3) பாடசாலை நூலகங்களும் அவற்றின் சேவைகளும் - சில குறிப்புகள். 21
- என். செல்வராஜா

(4) யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையம். 27
- க. சி. குலரத்தினம்

(5) அஞ்சலி - திரு. ஜோன் செல்வராஜா 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகவியல் . காலாண்டு வெளியீடு

மலர் 4 இதழ் 3 மார்ச், 1989

ஆசிரியர்: திரு. என். செல்வராஜா

ஆசிரியர் குழு: * திரு. சி. முருகவேள்
B.A.(HONS), Post. Grad.
Dip. in. Lib. (Lond.)

* கலாநிதி. வே. இ. பாக்கியநாதன்
B. A. M. Sc. (Lib. Sc)

* கலாநிதி. இ. பாலசுந்தரம்
B.A. , PHD.

* திருமதி ரோ. பரராஜசிங்கம்
B. Sc., M. L.I.S. (Madras)

* திருமதி. ரூ. நடராஜா
B. A., A. L. A. (Srilanka)

வெளியீடு : அயோத்தி நூலக சேவைகள்,
ஆனைக்கோட்டை.

சந்தா : தனிப்பிரதி ரூபா 10/-
ஆண்டுச் சந்தா ரூபா 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயில்

நூலகத்துறையில் புதிய அம்சங்களை அறிந்து கொள்வதற்கும் நூலகப்பொறுப்பாளர்களுக்கிடையே பரஸ்பர நல்லுறவையும் தொடர்புகளையும் வலுப்படுத்திக் கொள்வதற்கும் கருத்தரங்குகள், சேவைக்காலப் பயிற்சிகள் என்பன இன்றியமையாதன.

கல்வி நிறுவனங்களும் பொது சமூகசேவை நிறுவனங்களும் கருத்தரங்குகளையும், விரிவுரைகளையும் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று நாம் பல இதழ்களில் வலியுறுத்தி வந்துள்ளோம்.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் நூலகர்களுக்கான பயிற்சி ஒழுங்கு ஒன்றினை மேற்கொள்ள முன்வந்திருப்பதாக அறிகின்றோம். இம்முயற்சி வரவேற்கத்தக்கதாகும். யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நூலகமானது தமிழ்ப்பிரதேசங்களின் முதன்மை நூலகமாகக் கருதப்படல் வேண்டும். மத்தியநூலகமோ, குறிப்பிடத்தக்க முன்னோடி நூலகசேவையோ அற்ற இப்பிரதேசத்தில் நூலகங்களையும் நூலகத்துறையில் ஈடுபட்டுழைக்க விரும்பும் ஊழியர்களையும் மாணவர்களையும் வழிநடத்தும் பாரிய பொறுப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்குரியதாகும்.

திட்டமிட்ட கருத்தரங்குகள், நூலகர்களுக்கான இடைக்காலப் பயிற்சிகள் போன்றவற்றை வழங்குவதன் மூலமும் யாழ்-பல்கலைக்கழக நூலகம் நூலக உலகிற்கு வழிகாட்டியாக அமையும் என்று நம்புவோமாக.

07.05.89 ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOOLAHAVIYAL -- QUARTERLY

Volume: 4, Number: 3, March 1989

Editor: N. Selvarajah

Editorial Board:

* Mr. S. Murugaverl.
  B.A. (HONS), Post. Grad.
  Dip. in. Lib (Lond)

* Dr. V. E. Packiyanathan
  B.A. M.SC. (Lib.Sc)

* Dr. E. Balasundaram
  B.A. PHD.

* Mrs. R. Pararajasingam
  B. Sc., M. L. I. S. (MADRAS)

* Mrs. R. Nadarajah
  B.A., A. L. A. (Srilanka)

Publishers: Ayothy Library Service,
Anaicoddai, Srilanka.

Price per copy 10/- Annual Subcription 30/-

Acknowledgement.

We are extremely grateful to the Canadian Organization for Development through Education, who donated a REX ROTARY Duplicating machine to Ayothy Library Services for printing this Journal.

- Editor-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொது நூலக சேவை : புதிய கண்ணோட்டம்

ஈஸ்வரி கொறயா

அறிவு வளர்ச்சியையும், சுயாதீனக் கல்விக் கொள்கைகளையும் அடித்தளமாகக் கொண்டு முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் பொதுமக்கள் உத்தியோக வயது வர்க்கபேதமின்றி தமக்குத் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே சாதனம் பொது நூல் நிலையங்களேயாகும்.

அலுமாரிகளில் பூட்டி வைத்தும், கோவில்களில் வணங்க வேண்டிய பொருளாகவும் புத்தகங்கள் இருந்து வந்தகாலம் மலையேறி விட்டது. மாணவரிடமிருந்து பாதுகாப்பாக வைக்கப்பட்ட புத்தகங்கள் இன்று வாசிப்போரின் பொதுவுடைமையாகி விட்டது.

சுதந்திரம் கிடைத்த காலம் முதல் கல்வித்துறையில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான பாடசாலைகள், சர்வகலாசாலைகளும் என் சிறந்த சர்வகலாசாலையுமே பெருகி விட்டன. அத்தோடு உருகுணையிலும், தும்பறையிலும் சர்வகலாசாலை வளாகங்கள் உள்ளன. இதனால் வாசிகசாலைகளின் தேவை மேலும் அதிகரிக்கின்றது.

ஒரு பொதுத் தேசிய நூல் நிலையம் சட்டவரம்புகளுக்குட்படுத்தப்பட்டுப் போதிய அரசு நிதி உதவியும் பெற வேண்டும். நிதிப்பற்றாக்குறை, இட வசதியின்மை, தரங்குறைந்த நூல்கள் ஆகியன பெருங்குறைகளாகும். பயிற்சி பெற்ற நூல்நிலைய உத்தியோகத்தினர் இல்லாமை பயிற்சி பெற்றோருக்கு போதிய சம்பளம் அளிக்கப்படாமை இன்னும் ஒரு பிரச்சனையாகும்.

வெற்றோடு சனநெருக்கமுள்ள நகரங்களுக்கு நூல் நிலைய சேவை ஒழுங்கு படுத்தல் காடு மலை ஆறுகளுக்கப்பாலுள்ள சனநெருக்கமில்லாத கிராமங்களுக்கு வசதி செய்து கொடுத்தல் ஆகிய பிரச்சனைகளுமுள்ளன. மலை நாட்டின் உள்பகுதிகளில் போதிய வீதிகள் இல்லாமை புத்தகங்களைக் கொண்டு செல்ல மாட்டு வண்டிகளும் லொறிகளும் பாவிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தைப் பெறுகிறது.

முறையாகத் திட்டமிடப்பட்ட நூல்நிலைய சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கிடையாது. தடையின்றி இயங்கும் திட்டம் தேவை. முன்னேற்றத்திற்கு முக்கிய தடை நிதியாகும். ஒரு தேசிய நூல்நிலைய சேவை நடைபெறப் பணம் அவசியம். பொருளாதார சமூகப் பிரச்சனைகள் மத்தியில் முக்கியமாகக் கணிக்கப் படாத ஒன்றுக்கு பணம் ஒதுக்குவது கடினம். இதன் முன்னேற்றத்திற்கு தடையாயிருப்பது கொள்கை ஆக்குவோர் நூல் நிலையங்களின் முக்கியத்துவத்தை உணராமையேயாகும். வாசிக்கும் விஷயங்களை விநியோகிக்கும் புது முறைகளும் இல்லை.

விசேஷமாக விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகள் சம்பந்தமான நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகளில் ஒரு விழிப்பு ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 1-5 கோடி சஞ்சிகைகள் வருடாந்தம் வெளியாகின்றன. இவை 3கோடிக் கட்டுரைகள் ஆக்கங்களைக் கொண்டுள்ளன. வருடாந்தம் பல மகாநாடுகள், சம்மேளனங்கள் நடைபெறுகின்றன. அறிவு வளர்ச்சி கடுகதியில் நடைபெறுகின்றது. புதினங்கள் தேசிய வளமாகும். கிடைக்கப் பெறும் செய்திகள் அவை தேவைப்படுவோருக்கு கிடைக்க வசதி செய்தல் அவசியம். ஆயிரம் சஞ்சிகைகள் வீண் விரயமாவது தடுக்கப்படல் வேண்டும்;

நூல்நிலைய விஞ்ஞானத்தின் தொழில் நுட்ப முறைகளால் புத்தகங்களைக் காட்சிப்பொருளாக அல்லது செய்திகளை பத்திரப்படுத்தி வைக்கும் சாதனமாக கணித்த எண்ணக்கரு மாறி விட்டது.

தேசிய அபிவிருத்தியில் முக்கியபாகம் வகித்து சமூகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது நூல்நிலையங்களாகும்.

தொழில் வளர்ச்சிக்குரிய செய்தி விபரங்கள் இன்றி நாட்டின் தொழிற்துறை முன்னேற்றம் தடையின்றி நடைபெறாது.

வாசிப்புப் பொருள்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. வயது வந்தோருக்கான சாதாரண இலக்கியப் படைப்புக்கள் குழந்தை இலக்கியம் மும்மொழி பேசுவோருக்கு தாய் மொழியில் புத்தகங்களின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. புதிதாக அறிவைத் தேடும் மக்களுக்கு தேசிய மொழிகளில் இலகுவான புத்தகங்களை அளிப்பது அவசியம்.

தேசிய மொழியில் இலக்கியங்கள் குறைவாகவே உள்ளன எழுத்தாளர்கள் தமது நூல்கள் இலகுவாக விற்பனையாகாததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் தரமான புத்தகங்களை எழுத முடிவதில்லை. வாழ்க்கைத்தரமும் தனிமனித வருமானமும் குறைவாக இருப்பதால் புத்தகங்களை மக்கள் வாங்குவதில்லை. அதலால் எழுத்தாளருக்கும் வாசிப்போருக்குமிடையில் இயற்கையான இணைப்பாக அமைவது பொது நூல்நிலையங்களாகும்.

ஆரம்பத்தில் நூல்நிலைய சேவைகள் வளர்ந்தோர்க்கென மாத்திரம் தொடங்கப்பட்டதால் இலங்கையில் சிறுவர் நூல் நிலையங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. ஆனால் இன்று 14 வயதுக்குட்பட்டோர் சனத்தொகையில் 40-50 வீதமாக உள்ளனர். வாசிக்க அவாவுறும் மாணவருக்கு பாடசாலைகளில் நூல்நிலைய வசதியில்லாததால் பொது நூல் நிலையம் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

கிராமப் புறங்களில் பொது நூல்நிலையம், பாடசாலை நூல்நிலையங்கள் என இருவகைச் சேவைகளை அமைத்துக் கொடுப்பது இயலாத காரியம். சில பகுதிகளில் உள்ள நூல்நிலையங்களில் மாணவருக்கென ஒரு புத்தக அலுமாரி மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. சிலவற்றில் கதைநேரங்கள் அமைத்துக் கொடுத்திருந்தாலும் கண்காட்சிகள் குழு வேலைகளுக்கான வசதிகள், ஓய்வுநேரக் கழகங்கள் மிக அருமை. புத்தகங்கள் அடங்கிய பெட்டிகளை அனுப்பியும், நடமாடும் நூல்நிலையங்கள் மூலமும் நூல்நிலையச் சுவர்களுக்கு வெளியேயும் சேவையை நடத்தலாம். வைத்திய சாலைகள் நூல்நிலையங்கள் சிறைச்சாலை ஆகிய இடங்களுக்கும் சேவைகள் விஸ்தரிக்கப்படவில்லை.

தீவிரவாதிகளின் 1971 நடவடிக்கைகளுக்குப் பின் சிறைகளுக்கு ஒரு நூல்நிலைய சேவையை ஆரம்பித்த கொழும்பு பொது நூல்நிலையம் தற்போது அதைக் கைவிட்டுள்ளது. ஆயினும் நகரத்தின் சில பகுதிகளுக்கு தேசீய நூல் நிலைய சேவை ஸ்தாபனமும், கொழும்பு பொதுநூல் நிலையமும் புத்தகங்களையும் அசையும் நூல் நிலையங்களையும் அனுப்பி வருகின்றன.

நாட்டில் தீவிர பொருளாதார சமூக மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. இதனால் எமது மக்கள் மத்தியில் பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றைப்பற்றிய ஒரு விழிப்பு ஏற்பட்டுள்ளது. தமது உரிமைக

களையும் தேவைகளையும் உணரும் ஒரு புதிய வர்க்கம் சமூகத்தில் தோன்றியுள்ளது. இதனால் ஒரு புதுவகையான வாசிப்போருக்கு திருப்தி அளிக்கக்கூடிய வசதிகளை நூல்நிலையங்கள் அளிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பது புலனாகிறது. எங்கள் நாட்டின் நூல்நிலைய சேவைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கடன்கொடுத்தல், சஞ்சிகைகள், குழந்தைகள் பகுதி, அறிவு வளர்ச்சி எனப்பல உள்ளன. இவற்றோடு ஒரு கட்புல நூல் நிலையம் குருடர்களுக்கு 'பிரெயில்' பகுதி, அசையும் நூல்நிலையங்கள், கிளை நூல்நிலையங்கள் ஆகியன ஒரு பொது நூல் நிலையத்தின் அத்தியாவசிய தேவைகளாகும்.

பொது நூல் நிலையங்களில் பெரியோர் கல்வி.
---

பெரியோர் கல்வியில் பொதுநூல்நிலையம் பங்குகொள்ள வேண்டும். சமூகத்தின் தேவைக்கேற்ப இதன் நிகழ்ச்சிகள் அமைய வேண்டும். ஏனைய கல்வி ஸ்தாபனங்களின் கல்வி நிகழ்ச்சிகளோடு ஒத்துழைத்து இது நடத்தப்பட வேண்டும். இவை கண்காட்சிகள் நடத்தல், புத்தகஅட்டவணை தயாரித்தல், மாணவருக்கென விசேஷ புத்தகங்களை ஒதுக்கல் எனப் பலவகைப்படும். வாசித்தல் ஜனப்பிரியமாக்கும் பொருட்டு விரிவுரையாளர்கள் குழுவிவாதங்கள் ஆகியவற்றிற்கு நூல்நிலையங்கள் தங்கள் சொந்த நிகழ்ச்சிகளைத் தயாரிக்கலாம். கட்புல உபகரணங்கள் பாவித்து இந்நிகழ்ச்சிகளை வசீகரப் படுத்தலாம்.

வாலிபர் சேகரிப்பு.
---

வாலிப வயது வந்தோரின் வாசிப்பு பழக்கங்களுக்கு பல அம்சங்கள் காரணமாயுள்ளன. குழந்தைப்பருவத்தை விட்டு வாலிபத்தின் நுழைவாயிலில் அடியெடுத்து வைப்பவன் இளம் வாலிபன். பெற்றோர் மற்றோரின் அதிகாரத்திலிருந்து சுதந்திரத்தை விரும்பும் வயது. வயது வந்தவராக ஏற்றுக் கொள்ளப்படும் வரை காத்திருக்கும் இடைவெளி இளம் வாலிப வயது. ஆதலால் இக்கால எல்லை சிக்கலான விழிப்பு ஏற்படக் கூடிய காலமாகும். சுருங்கச் சொன்னால் வயது முதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத ஒருவருக்கு இது ஒரு சவால் காலமாகும். இளம் வயதினர் தம்மைப் பக்குவப் படுத்திக் கொள்ளுதல், தோற்றத்தை விருத்தி செய்தல், உறுதித்தன்மை ஆகியவற்றிற்கான தேவையைப் பற்றியே எப்பொழுதும் எண்ணுகிறார்கள்.

மாகரட் மாஉஃல் என்னும் இளம்வயதுப் பெண் தனது நூல் நிலையப் புத்தகத்தில் 1ம் பாடத்தில் ஒரு இளம்வயதினரைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். அவர்கள் அவதானம் விளைவித்தல், பிரசங்கித்தனம், தனித்திருத்தல் கிளர்ச்சி செய்தல், அதி நவீன நாட்டத்தைக் கொண்டிருத்தல், சமய நம்பிக்கை கொள்ளாமை, ஒழுங்கீனம், குரசிய மனப்பான்மை போன்ற தன்மைகளை கொண்டவராவர். மேலும் சட்டப்படி நடத்தல், தோற்றத்தில் கண்காணிப்பை காட்டுதல், மனோதத்துவத்தில் உச்சக்கட்டத்தை எண்ணல், மற்றவர்களுக்கு மனிதத் தன்மையான செயல்களைச் செய்வதன் மூலம் தம்மை எடுத்துக் காட்டல் போன்ற தன்மைகளையும் காட்டுபவர்களாகும்.

இளம்வயதினர் தமது பிற்காலத்தில் அடுத்தடுத்து அல்லது இடைக்கிடையில் தமது வாழ்க்கை மிகவும் உச்சக் கட்டத்தில் இருக்க வேண்டுமென எதிர் பார்ப்பவர்களாகும். இறுதியிற் கஷ்டத்திற்குள்ளும் அகப்பட வேண்டியும் நேரிடுவார்கள்.

எனவே இவ் இளம் வயதினரை எங்கள் நூல்நிலையங்களுக்கு அழைத்து அவர்களுக்குத் தகுந்த வாசிப்புப் புத்தகங்களையும், ஏனைய விடயங்களையும் கொடுப்பதன் மூலம் அவர்களின் மூளை மனோ வளர்ச்சிகளை விருத்தி செய்ய வேண்டும்.

இதற்காக அவர்களுக்கென புறம்பான இடம் (அறை) ஒதுக்கப்பட வேண்டும். இவ்வறை கவர்ச்சிக்குரியதாகவும், வசதியான சூழலைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு விருப்பமான புத்தகங்கள் வார சஞ்சிகைகள், பார்க்க கேட்க விரும்பும் பொருட்களையும் வழங்கல் வேண்டும். கட்டுப்பாடுகள் குறைந்ததாக இருத்தல் வேண்டும். அதேநேரத்தில் குறிப்பிட்டளவு வினையமும் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை விட்டுப்போன பின்னர் வேலையற்று இருப்பவர்கள் நூல்நிலையத் தொழிற் பாட்டில் ஆர்வத்தைக் காட்டினால், இலங்கையில் தற்போது அதிகரித்து வரும் குற்றச் செயல்களிலிருந்து விலகுவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

வாசிக்கும் பழக்கத்தை புத்தகங்களின் குழலிலேயே உண்டாக்கலாம். இன்றைய தாழ்ந்த நடுத்தர வகுப்பினர் இச்சூழலை பொதுசன அல்லது பாடசாலை நூல்நிலையத்திலிருந்தே பெறுகிறார்கள். ஆகவே, பாடசாலை, பொதுசன நூல்நிலையங்கள் இளம் சமுதாயத்தினருக்கு பெருமளவில் மூலகாரணமாக விளங்குகின்றன. அவர்கள் சிறந்த பிரஜைகளாக நாட்டுக்கு நற்சேவையை ஈட்ட வேண்டுமாயின் நூல்நிலையம் அதனுல் சிறந்தவற்றை அளிக்க வேண்டும்.

உள்நாட்டு சேகரிப்புகள் .

இலங்கையின் முழுத் தோற்றத்தையும், அநேகமாக இலங்கையின் எல்லா பொதுசன நூல்நிலையங்களும் எடுத்துக் காட்டுகின்றன. இது செயற்பட முடியாதவிடத்து குறைந்தது நூல்நிலையம் அமைந்திருக்கும் இடம், குறிப்பாக கொழும்பு, கொழும்பு மாவட்டம், பொதுசனநூல்நிலையம் என்று கூறும் போது அதன் நகரம் சார்பான எல்லாப் புத்தகங்களும் இருக்க வேண்டும். இது அச்சிடப்பட்ட, எழுதிய, படத்துடன் சேர்க்கப் பட்ட ஏட்டுகளாக இருக்க வேண்டும். இவை எல்லாம் உள்நாட்டில் அச்சிடப்பட்டவையாக, உள்நாட்டு எழுத்தாளர்களினுல் எழுதப்பட்டவையாக மத்தியி அரசாங்கம், உள்நாட்டு அரசாங்கம் உட்பட அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதோடு உள்நாட்டு ஸ்தாபனங்களான நகரசபை, கிராமசபை ஆதியவின் விபரங்கள் அடங்கிய நூல்களும் எழுதப் பட வேண்டும். குழுக்களின் கூட்டங்களில் வாசிக்கப்படும் அறிக்கை அதன் கணக்குகள், புதினப்பத்திரிகையில் இடம் பெறும் இக் குழுக்கள் சார்பின தகவல்கள் போன்றவை அடங்க வேண்டும். சாதாரணமாக உள்நாட்டு நிலையங்களால் வெளிவிடப்படும் தகவல்களை அவர்களிடமேயிருந்து பெற்று வெவ்வேறு வாசிப்பு நூல்களை வெளியிட்டால் கூடிய தொடர்புடையனவாய் செய்திகள் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக நூல்கள், சங்கீதம், படமாளிகை, நடிப்பு போன்றவையும் அடங்க வேண்டும். போதியளவு இடமும், பொருட்களும் கிடைத்தால் அவற்றை வெவ்வேறு பிரிவாக அமைக்கலாம். அல்லாவிடில் நூல்நிலையத்தின் ஒரு பகுதியாக அமையலாம்.

குருடு, பகுதி பார்வை உடையோருக்கான நூல்நிலையம்.

---

பார்வை குறைந்தவர்களுக்கான தேவையை இது வரையில் சிறிலங்காவின் நூல்நிலையங்கள் கவனித்து வரவில்லை. இவர்களுக்கும் பார்வை உள்ளவர்களுக்கு அளிக்கும் அதே வசதிகளை கொடுக்க வேண்டும். குருடானவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் இது கட்டாயமாக கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

இத்தேவைக்காக வாசிப்புப் பொருள்களாகிய கதைக்கும் புத்தகங்கள், தட்டுகள், கசெற்றுகள், நாடாக்கள் போன்றவை இவர்களுக்கும் தடையின்றி கொடுக்கப்படல் வேண்டும்.

குருடு செவிடு தேசிய இயக்க குழுவினரின் ஆலோசனைகளுடன் மேற்கூறிய வசதிகள் அவர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும். பகுதியாகப் பார்வை பெற்றிருப்போருக்கு பெரிய அச்சுப் புத்தகங்கள் எடுத்தல் வே-ண்டும். ஆங்கில மொழியில் எத்தனையோ நிலையங்களில் வெளியீடுகள் வந்துள்ளன. ஆனால் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் வரவில்லை. இதைத்தான் எமது உள்நாட்டு வெளியீட்டுத் திணைக்களத்தினர் கக்கமெடுத்து அவற்றின் வெளியீட்டை பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்.

எல்லாப் பொது நூல்நிலையங்களிலும் குருடர்களுக்கான நூல்நிலையங்கள் வைத்திருப்பது கடினமாயிருக்கலாம். ஆயினும் நகரங்களிலேனும் முயற்சி எடுத்தல் அவசியம். மாடிக்கட்டமாயின், தரைப்பகுதியில் நுழைவாசலுக்கு அண்மையில் ஒரு அறையேனும் ஒதுக்குவது நல்லது. நூல்நிலைய ஊழியர்களும் குருடர்களிடம் அன்பும், அனுதாபமும் காட்டுவது அவசியம். உணர்வுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன் ஊனமுறும் குருடர்களும் ஏனையோரைப்போல் நூல் நிலையங்களைப் பாவிக்கக் கூடியவர்கள் என்பதை மறக்கக் கூடாது.

## பொது நூல்நிலையங்களில் கட்புல உபகரணங்களின் பாவிப்பு.

பழைய காலந் தொடக்கம் உலகெங்குமுள்ள பொது நூல் நிலையங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளும் காரியத்தில் ஈடுபட்டு வந்துள்ளன. கட்புல உபகரணங்கள் பாவிக்கப்படுவது பாரம்பரிய முறையில் இருந்த போதும், இலங்கை நூல்நிலையங்கள் அச்சிடப்பட்ட பொருள்களை மாத்திரமே பாவித்து வந்துள்ளன. கட்புல உபகரணங்களின் அறிமுகம் ஒரு புது ஈடுபாடாகும். ஐக்கிய அமெரிக்கா நூல்நிலையங்களில் தொடங்கப்பட்ட கட்புல உபகரண முறைகள் இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதி முன்னேற்றமடைந்துள்ளன.

நூல்நிலையத்தையும் அதன் வளங்களையும் மனிதருக்கு அங்கத்தவர்களுக்கு வளர்ந்தோர் கல்வி நிலையங்களுக்கு அறிமுகப்படுத்தக் கூடிய ஒரு சிறந்த சாதனம் கட்புல உபகரணங்களாகும். இவை தர்க்கங்களின் போதும், தலைமைப்பீடப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கும் இன்றியமையாதன. சிறுமாணவர்களின் நிகழ்ச்சிகளின் போது படக்காட்சிகள் பாவிக்கப்படலாம். நிழல் படங்களை, புதுவிடயங்களை வாசிக்கத்தூண்ட கதை நேரங்கள், அழகுபடுத்த நூல்நிலையத்தோடு பரிச்சயமில்லாத சிறுவருக்கு தூர இடங்களைப் பற்றிய கட்புல அறிவைக் கொடுத்துக் கவரப் பாவிக்கலாம்.

பதிவு செய்யப்பட்ட விமர்சனங்களோடு கூடிய நிழல் படங்கள் பொது நூல்நிலையங்களில் விருத்தி செய்யப்படல் வேண்டும். இசைத்தட்டுக்களை வாசிப்போரும், வாசியாதோரும், எல்லா வயதினரும் பாவிக்கலாம். இதற்கென ஒரு கேட்கும் அறை இருத்தல் அவசியம்.

படக்காட்சிகள், படத்துணுக்குகள், விளம்பர அட்டைகள் விசேஷமாக 16, மி.மீட்டர் படங்கள், போதனைகள் நூல்கள் மாணவர் கதை நேரம், நிகழ்ச்சித் திட்டமிடல், மாநாடுகள் ஆகியவற்றில் புத்திசாலித்தனமாகக் கையாளப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறைகள் விஷயங்களில் ஆர்வத்தையும், மனதில் பதிய வைக்கவும் உதவுகின்றன.

குறைவாக வாசிக்கும் குழுக்களுக்கு பார்வைப் பொருட்கள், உபயோகமாகின்றன. செயல்முறையான கல்வி நிகழ்ச்சிகளை நடாத்தும் நூல்நிலையங்கள் சமூகத்தின் இயக்கங்களுக்குப் பல வகையிலும் உதவி செய்யலாம்.

கட்புலசாதனங்களை இரண்டு வகையாக வகுக்கலாம். ஒன்று பொதுசன தொடர்புகளுக்காகப் பாவித்தல். மற்றது சமூககுழுக்களுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரித்தல். முதல் கூறியது சம்பந்தமாக நூல்நிலையங்களின் உள்ளேயும், வெளியேயும் நிகழ்ச்சிகளை நடத்தலாம். படங்களும், பதிவுத் திட்டங்களும் கைவசம் உள்ளன என்பதை சமூகக் குழுக்கள் அறியத்தர வேண்டும்.

இலங்கையில் கட்புல சாதனங்கள் நூல்நிலைய சேவைகளின் போது பாவிக்கப்படுவது அரிது. ஏனைய நாடுகள் இப்படியான கட்புல சேவைகளுக்குச் சமூகமத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. வளர்ந்தும் வருகிறது. அச்சுச் சாதனங்களை விட ஏனைய முறைகளையும் கையாளா விட்டால் நூல்நிலைய சேவைகள் குற்றம் சாட்டுதலுக்குஉள்ளாகலாம். கட்புலசாதனங்களுக்குத் தங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் 10 வீதத்தை எனும் நூல்நிலையங்கள் ஒதுக்க வேண்டும்.

கட்புல சேவைகளின் சில நன்மைகள் என்னவெனில், அவை புதுமுகங்களை நூல்நிலையத்திற்குக் கொண்டு வருகின்றன. பொதுசனத் தொடர்பு, அச்சிடப்பட்ட பொருள்களை வாசிக்கத் தூண்டுதல் ஆகியவற்றைச் செய்கின்றன.

அதே போன்று இவற்றுக்குத் தேவைப்படும் கூடிய செலவு பழுதுபார்த்தலுக்குத் தேவையான நிதி, பயிற்றப் பட்ட தொழிலாளர் இல்லாமை ஆகிய குறைகளும் உள்ளன. அதோடு எங்கள் நூல்நிலையங்களில் இவற்றைக் கையாளக் கூடிய சாதனங்களும் இல்லை. கட்புல சாதனங்கள் பொது நூல்நிலைய சேவைகளின் ஒன்றிணைந்த கருவிகளாகவும் பாவிக்கப்படலாம். உதாரணமாக சனத்தொகையில் கூடிய பகுதிக்கு பல காரணங்களுக்காக பொது நூல்நிலைய சேவையின் பாவிப்புக் கிடைப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் அச்சிடப்பட்ட ஏனைய பொருட்களை மாத்திரம் விநியோகிக்கும் ஸ்தாபனமாக மாத்திரம் பொது நூல்நிலையங்கள் இயங்க முடியாது. கட்புல உபகரணங்கள் தயாரிப்போருடன் ஒத்துழைத்து அவர்களின் உதவியையும் புத்திமதியையும் கேட்டு இயங்க வேண்டும்.

புத்தகம், புத்தகமல்லாதவையென பிரித்துக் காலம் போக்குவதைவிட அவற்றுள் அடங்கிய விஷயங்களில் கருத்தைச் செலுத்த வேண்டும். சூக்குமப்பொருளை விடத் திண்மப் பொருளே கல்விக்கு வளர்ச்சியை ஊட்டக் கூடியது. என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் கட்புல கல்வி முறையின் அவசியத்தைப் புலப்படுத்துகின்றன.

1. மாணவர், பொதுமக்களிடையே அர்த்தமற்ற சொற்களைக் குறைத்து எண்ணக்கரு ஏற்படத்தக்க அடிப்படையை அமைத்துத் தருகின்றது.

2. மாணவர் மத்தியிலும் சமூகத்தினர் மத்தியிலும், கூடிய கவர்ச்சியை ஏற்படுத்துகிறது.

3. சுயமாக இயங்கத்தூண்டும் ஒரு உண்மை அனுபவத்தைத் தருகிறது.

4. ஊக்க முறைக் கற்றலை நிரந்தரமாக்குகிறது.

5. படக்காட்சிகள், தொடர்ச்சியான எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

6. சொற் பெருக்கத்திற்கு உறுதுணையாகின்றது.

7. ஏனைய பொருள்களால் கிடையாத அனுபவம், ஆழம், கற்றலுக்கு விவிதத் தன்மை ஆகியவற்றைத் தருகின்றன.

விளக்கங்களிடாத சுவரொட்டிகள், வெற்றிகரமாக சில தேசங்களில் பாவிக்கப்பட்டு வருகின்றன. படக்காட்சிகளுக்குப்பின் உரையாடல்கள் நடத்துவதால் அறிவில்லாத கைத்தொழிலாளிகளிடையே ஆர்வத்தை ஏற்படுத்

தலாம்.

இப்படியான சந்தர்ப்பங்களில் கட்புலன் முறைகளை விட வேறு எந்த முறைகளையும் கல்வி முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்த முடியுமா?

இவற்றுடன் இளையோர் மத்தியில் அச்சிடப்பட்ட விடயங்களுடன் செவிப்புல- கட்புல உபகரணங்கள் வேறுகவும் இணைத்துப்பாவிக்கப்படுவது அவசியம்.

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வெற்றியின் காரணமாக பதிவு செய்யப்பட்ட கதைநேரங்கள், மாணவருக்கான படக்காட்சிகள் அமைகின்றன. பட அடிப்படையான உரையாடல்கள் அதிகம் முன்னேறியுள்ளன. இவை நூல்நிலையத்தின் சொந்த நிகழ்ச்சிகளிலும், சுயமான சமூகக்குழுக்களிடையேயும் இடம்பெற வேண்டும். செவிப்புல-கட்புல பொருட்களோடு மற்ற நூல்நிலையப் பொருட்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டியதன் அவசியம் புலனாகிறது.

மனிதனின் கருத்துப்பரிமாறும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக இலங்கையின் நூல்நிலையங்கள் செய்திகள் ஸ்தாபனத்தின் எண்ணக்கருத்தை விளங்கிச் செயல்பட வேண்டும்.

இவற்றை வெற்றிகரமாக அடையும் பொருட்டு செவிப்புல கட்புல சேவைகள் ஆராயப்பட்டு இலங்கையின் நூல்நிலைய சேவைகளின் ஒரு முக்கிய பகுதியாக நடாத்தப்படல் வேண்டும்.

பொது நூல்நிலைய சேவைகள் வெற்றியடைய நூல்நிலையங்களுக்கிடையே ஒத்துழைப்பவசியம். நூல் நிலையங்களுக்கிடையில் கடன்வழங்கிக் கொள்ளும் முறைகள் இலங்கையில் இல்லை. நூல் நிலையங்களுக்கிடையில் மாத்திரமன்றி கல்வி, தொழில், உற்பத்தி, உத்தியோக ஸ்தாபனங்களுக்கிடையேயும் இணைப்பு ஏற்பட வேண்டும்.

அதிக ஓய்வு நேரத்தைக் கொண்டுள்ள வாலிபர்களை நூல்நிலையப்பக்கமாகக் கவர வழிவகுக்க வேண்டும். இது ஒரு சமூகப்பிரச்சனை. ஆதலால் அவர்களின் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கேற்ப வசதி செய்து நூல்நிலையப் பக்கம் கவர முயற்சிக்க வேண்டும். மக்களின் தேவைக்குத் தேவையான வழிவகுப்பதால் பொது நூல்நிலையங்கள் சமூகத்தின் செய்தி நிலையமாக அமையலாம்.

நூல்நிலையங்கள் மூலம் சமாதானமும், புரிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படலாம். முறையான கல்வியை முடித்துக்கொண்ட பின்பும் மக்கள் அறிவைத் தொடர்ந்து பெற நூல் நிலையங்கள் உதவி செய்யலாம்.

நன்றி: அறிவின் பாதையிலே.
பதிப்பாசிரியர்: ஈஸ்வரி கொறயா, கொழும்பு பொது நூலகம், 1980.

146 காங்கிரஸ் நூலக வகுப்புமுறை.

## LIBRARY OF CONGRESS CLASSIFICATION

கலாநிதி. வே. இ. பாக்கியநாதன்.

### 0. அறிமுகம்.

ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நூலகம் உலகிலேயே மிகப் பரந்த அளவில் தகவல் தளங்களை உள்ளடக்கிய தேசிய நூலகமாகும். மேற்கத்திய நாடுகளிலுள்ள நூலகங்களில் அதிகப் பரப்பினையும், தேசியச் சேர்க்கைகளையும், அழகு மிகு கட்டிடங்களையும், அதிக அளவிலான ஊழியர்களையும் கொண்டதாக மிளிர்கின்றது. இங்குள்ள நூல்களில் எண்ணிக்கை 19 மில்லியன்களாகும். படங்கள், நாடாக்கள், சங்கீதத்தட்டுக்கள், திரைப்படச் சுருள்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 58 மில்லியன்கள் என்று கூறும் பொழுது அந்நூலகத்தின் உள்ளடக்கத்தை ஓரளவு உணர முடிகின்றது.

### 1. ஆரம்ப முயற்சிகள்.

காங்கிரஸ் நூலக வரலாறு மிகப்பழமையானதும் சர்ச்சைகளுக்கு மத்தியில் உருவானதுமாகும். 1774ஆம் ஆண்டு கூடிய காங்கிரஸ் தம் தேவைகளுக்கேற்ற நூல்களை பிலடெல்பியா-

ckley யாவில் உள்ள நூலகத்திலிருந்து உசாத்துணைத் தேவைக்
கென பெறவேண்டியிருந்தது. எல்பிறிஜ் ஜெறி( Elbridge Gerry
) என்பவர் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில்
கைச்சாத்திட்டவர்களில் ஒருவர். அமெரிக்க காங்கிரஸ்
அங்கத்தவர்களினது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய
நூல்களைக் காங்கிரஸ் கொள்வனவு செய்யவேண்டுமெனவும்
அதற்கான நிதியினை ஒதுக்குமாறும் இவர் 1789ஆம்
ஆண்டு நடைபெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்தில் குரல் எழுப்பினார்.
னர். இதற்கிணங்கக் காங்கிரஸ் நூல்கள் கொள்வனவு
செய்வதற்கென ஆரம்பத்தில் 1000 டொலர்களையும்,
பின்னர் வருடாவருடம் 500 டொலர்களையும் ஒதுக்குவ.. !
தெனத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் இது பெரும் சர்ச்
சைக்கு உள்ளாகியது. 1790ஆம் ஆண்டு வெளிவந்த சுதந்
திர தின ஏட்டில் பின்வருமாறு கண்டனம் ஒன்று காணப்பட்
டது.

"நாடு கடன் பழுவையும், அரசாங்கத்தை நடத்துவதற்
குத் தேவையான நிதிப்பற்றாக்குறையையும் எதிர்நோக்கி
யுள்ள இச்சந்தர்ப்பத்தில் பார்சல் புத்தகங்களுக்கென
நிதியினைச் செலவு செய்வதாவது மடமைத்தனமுடையது
மட்டுமல்லாது நிதியினை அவமாகச் செலவு செய்வதுமா
கும். காங்கிரஸ் உறுப்பினர்களை அரசியல் வரலாற்றில்
ஞானமுடையவர்கள் என்ற உணர்விலேயே தெரிவு செய்
தோம். அவர்கள் அப்படியில்லையாயின் எமது தேர்வில்
நடந்த பிழையாகத்தான் அது இருக்க வேண்டும். நடை
முறை ' அரசியல் தான் தேவையேயன்றி புத்தகங்களைப்
படித்து அரசியல் நடத்தத் தேவையில்லை"

இப்படியான சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்ட அமெ
ரிக்க காங்கிரஸ் நூலகம், இன்று மிக நவீன வசதி
கொண்ட நூலகக் கட்டடங்களையும், அதி உன்னத சே
வைத் தரத்தையும், தனக்கென வகுக்கப்பட்ட ஒரு வகு-
ப்பு முறையினையும் தன்னகத்தே கொண்டு 36 ஏக்கர்
நிலப்பரப்பில் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் இரு சபை
களின் பிரதிநிதிகளுக்கும் தேவையான தகவல்களை உட-
னுக்குடன் வழங்கும் ஆராய்ச்சி நூலகமாகவும், தேசிய
நூலகமாகவும் சேவையாற்றி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் நூலகம் ஆரம்பிக்கப்பட்ட போது அது 964 நூல்களையும், 4 வரைபடங்களையும் கொண்டதாக இருந்தது. 1800ஆம் ஆண்டளவில் 5000 டொலருக்குரிய நூல்களைக் கொள்வனவு செய்தது. 1814ஆம் ஆண்டு பிரிட்டிஉஷ்சார் வாஷிங்டனைத் தாக்கிய போது இந்நூலகமும் தாக்குதலுக்குள்ளாகியது. இதனால் அதனுடைய சேர்க்கையில் பாதி தீக்கிரையாகிற்று. எனினும் 1815ஆம் ஆண்டு தொமஸ் ஜெபர்சன் ( Thomas Jefierson நூலகத்திலிருந்து, அழிந்து போன 7000 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் பிரகாரம் அவரினால் வகுக்கப்பட்ட 44 பிரதம வகுப்புக்கள் வகுப்பாக்கத்திற்கு அடித்தளமாக அமைந்தன. இம்முறையே 19ஆம் நூற்றுண்டின் இறுதிவரை பாவனையில் இருந்தது. 1857ஆம் ஆண்டும் தீ இந்நூலகத்தைப் பாதித்தது. எனினும் மனச்சோர்வடையாது இந்நூலகம் வளர்ச்சியடையத் தொடங்கியது.

1815-1897 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலமே காங்கிரஸ் நூலகத்தில் துரித வளர்ச்சிக் காலம் எனலாம். 1790ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பதிப்புரிமைச் சட்டம் அரசாங்க நிறுவனமொன்றில் நூல்கள் சேமித்து வைக்கப்பட வேண்டுமெனக் கட்டளையை விதித்தது. 1840ஆம் ஆண்டிலிருந்து இந்த நூலகம் வெளிநாட்டு அரசாங்கச் சான்றுகளைச் சேமித்து வைக்கும் நிறுவனமாகவும், நூலுரிமைப்பதிவு நிலையமாகவும் Copy right 1866இல் இருந்து சிமித்சோனியன் நிறுவனத்தின் Smithsoniar Instituitionநூலகச் சேமிப்பு நிலையமாகவும் மாறிய படியினுற்றுன் இது வளர்ச்சியுற முடிந்தது. 200 நாடுகளிலிருந்து தனது சேர்க்கைக்கென அவணங்களைப் பெற்றுக் கொள்கின்றது

இந்நூலகத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் நோக்குடன் காலத்துக்குக் காலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதற்கென அரும்பெரும் நூற் சேர்க்கைகள் கொள்வனவு செய்யப்பட்டன. போர்ஸ்( Force ) என்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரித்து வைத்திருந்த அமெரிக்க கலைக்களஞ்சியத் தொகுதிகளை 1867ஆம் ஆண்டிலும், அமெரிக்கப் புரட்சி பற்றிய நூல்களை ரோச்சம்பியூ Roch ambeau என்பவரிடமிருந்து 1853ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்தனர். வெற்றுடன் குடியரசுத் தலைவர்களாக இருந்த ஜோர்ஜ் வோஷிங்டன் George Washington 1834 ஜேம்ஸ் மாடிசன். James Madison 1837. தோமஸ் ஜெபர்சன். Thomas Jefferson, 1848. ஜேம்ஸ் மொன்றோ. James Monroe, 1849. ஆகியோரது சேர்க்கைகளையும் அவரவர்க்கு அருகாமையில் குறிப்பிடப்பட்ட வருடங்களில் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்கியது. இதே போன்று அலெக்ஸாண்டர் உறமில்டன் 1818. Alexander Hamilton. பெஞ்சமின் பிராங்கிலின். Benjamin Franklin 1882. ஆகியோரது நூலகச் சேர்க்கையைச் சேர்ப்பதற்கு தேவையான நிதியினையும் அமெரிக்கப் பாராளுமன்றம் காலத்துக்குக் காலம் அங்கீகரித்துதவியது. இதனைவிடப் பல பெரியார்கள் தமது நூலகச் சேர்க்கைகளை நன்கொடையாகவும் இந்நூலகத்திற்கு வழங்கினர். டோனர் வழங்கிய அமெரிக்க கலைக்களஞ்சியத் தொகுதிகள் குஉஷிங் cushi, ராக்உறில் Rock hill. ஆகிய இருவரும் வழங்கிய இலக்கியத்தொகுப்பு நூல்கள், சுல்தான் அப்துல் அமீத் வழங்கிய துருக்கிய இலக்கிய நூல்கள், ஆகியவை இந்நூலகத்திற்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்களில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

1.1. காங்கிரஸ் வகுப்பு முறை.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் [illegible]மன்றத்தின் பிரதிநிதிகள் சபை, செனட்சபை ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் ஆட்சியாளர்களுக்கு உதவுவதற்கென ஆரம்பிக்கப்பட்ட நூலகம், அச்செயலைத் தலைமையாகக் கொண்டு வேறு பல சேவைகளையும் ஆற்றி வருகின்றது. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நூலகருக்கு ஆரம்பத்தில் நாளொன்றுக்கு ஒரு டொலரே வேதனமாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொமஸ் ஜெபர்சன் தனது சிநேகிதனை யோன் ஜேம்ஸ் Jho
பெக்லி Jhon James Beckley என்பவரை நூலக
ராக நியமித்தார். ஜெபர்சனது 44 வகுப்புக்களும்
நூலக சேர்க்கையிலே வகுப்பதற்கு 19ஆம் நூற்றாண்
டின் இறுதிவரை பாவிக்கப்பட்டு வந்தது. ஆவல் 1899ம்
ஆண்டு நூலகராக நியமிக்கப்பட்ட கலாநிதி கேபட்
பட்ணம் Dr. Hebert Putnam காங்கிரஸ்
நூலகத்திற்கெனப் பிரத்தியேகமானதொரு வகுப்பு முறை
யில் கவனம் செலுத்தினர். இவரது பதவிக்காலத்தில் காங்
கிரஸ் நூலகம் புதியதொரு சகாப்தத்தைக் கண்டதென
கொள்ளலாம். இவர் பதவியேற்ற பின்னர் புதிய நூலகக்
கக் கட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. நூலகவியலில் தேர்
ச்சி பெற்றவர்கள் நூலகத்தில் நியமனம் பெற்றனர்.
காங்கிரஸ் நூலக வகுப்பாக்கம் உருவானது. அப்பொ-
ழுது பாவனையில் இருந்து வந்த தூயி தசாம்ச வகுப்பு
முறையையும் கட்டறினது விரிவாக்க வகுப்பு முறையையும்
ஆராய்ந்து அவற்றிலுள்ள சிறப்பம்சங்களையும் தேர்ந்தெ-
டுத்து, காங்கிரஸ் நூலகத்தின் முக்கியத்துவத்தையும், தே
வைகளையும், சேர்க்கையினது எதிர்கால வளர்ச்சியின்
பாதையினையும் உற்று நோக்கி, புதியதொரு வகுப்பாக்
கத்தை உருவாக்கினர். மற்றைய வகுப்பாக்கங்களைப்
போலல்லாது இதில் நூலகத்தினது பல்வினைப்பட்ட
சேர்க்கைகளை மனதிற்கொண்டு அவற்றிற்கேற்றவாறு பிர
தம, உப வகுப்புக்கள் அவ்வவ் துறையில் நிபுணத்துவம்
உடையவர்களின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டன. நூல்
களுக்கான வகுப்புகளாக இவை இருந்தனவே தவிர, வகு
ப்புகளுக்கேற்ற நூற்சேர்க்கையாக இவ்வகுப்பு முறை
அமையவில்லை. குறியீடுகளும் அவ்வாறே அமைந்தனவென
லாம். இந்நூலகத்தில் உள்ள பெரும் பகுதி, நூல்
விவரப்பட்டியல் Bibliography பொதுச்சட்டம்
Public law நுண்கலைகள், அமெரிக்கப் பிரதேச
வரலாறு, வாழ்க்கைவரலாறு, வம்சாவழி Generology
என்ற பெரு வகுப்புகளுள் உள்ளடக்கக் கூடியனவாக இருந்
தன. பட்ணமும், பிரதம பட்டியலாளராகவிருந்த சார்
ள்ஸ் மாட்டேல் Charles Martel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரும் இவ்வகுப்பு முறையில் ஆக்கத்திற்கும் அமைப்புக்கும் பெரிதும் உழைத்தனர்.

1.2. பிரதம வகுப்புக்கள்.

காங்கிரஸ் வகுப்பு முறையில் பிரதம வகுப்புக்களை அமைப்பதற்காக 21 பெரிய உரோம எழுத்துக்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. IOWXY என்ற எழுத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இவ்வகுப்புக்கள் யாவும் ஒரே காலத்தில் வெளியிடப்படாது 1899-1940 ஆண்டுகளுக்கிடையில் வெளிவந்துள்ளன. சட்டம் 1977ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவ்வகுப்புக்களில் அட்டவணைகள் தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளமையும் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். சகல வகுப்புக்களின் நிரைகளும் 84 தொகுதிகளுள் அடக்கப்பட்டுள்ளன. வகுப்புக்கள் 31 தொகுதிகளாய் உள்ளன. பிரதம வகுப்புக்களும் அவற்றின் பதிப்பு வருடங்களும் பின்வருமாறு.

பிரதம வகுப்புக்கள். Main Classes.

A General Polygraphy பொது- 4வது பதி. 1973.

B 1, Philosophy, Psychology. தத்துவம், உளவியல் மூன்றாவது பதிப்பு 1979.
B-BJ

B-2 Religion சமயம் 2வது பதி
BL-BX. 1962.

C Auxiliary Sciences of History. வரலாற்றின் உதவு விஞ்ஞானங்கள் 3வது பதிப்பு 1975.

D. General and old world history. பொது புராதன உலக வரலாறு 2வது பதிப்பு, 1959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E-F- American History.
அமெரிக்க வரலாறு
3வது பதிப்பு. 1958.

G - Geography, Maps, Anthropology, Recreation.
மானிடவியல், பொழுதுபோக்கு, புவியியல் படங்கள்
4ம் பதிப்பு 1976.

H. - Social Sciences.
சமூக விஞ்ஞானங்கள் 3வது பதிப்பு 1950.

J. - Political Science
அரசியல் விஞ்ஞானம் 2வது பதிப்பு. 1924.

K. - Law(General)
சட்டம் (பொது) 1வது பதிப்பு. 1977.

KD. - Laws of the United Kingdom and Ireland.
ஐக்கிய இராச்சியம் அயர்லாந்துச் சட்டம். 1வது, பதி. 1976.

KF - Law of the United States
ஐக்கிய அமெரிக்க நாட்டுச்சட்டம். 1வது பதி. 1969.

KE.- Law of the Canada.
கனடிய சட்டம். 1வது பதிப்பு. 1976.

L.- Education.
கல்வி 3வது பதிப்பு. 1951.

M. - Music. Books on Music.
சங்கீதம். சங்கீதம் பற்றிய நூல்கள் 3வது பதிப்பு. 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலைகள். 4வது, பதி.
N.- Fine Arts. 1978.

P-pA.- General Lin guistics, Classical

பொது மொழியியல், புராதன இலக்கியம், இலக்கணம், 1வது பதிப்பு. 1928.

PA - Supplement. Modern Greek Literturcs of Medieval and Modern Lati n Literature

அநுபந்தம்- நவீன கிரேக்க இலக்கியம், மத்திய நவீன லத்தீன் இலக்கியம். 1வது பதிப்பு. 1968.

PB-PH.- Modern European Languages.

நவீன ஐரோப்பிய மொழிகள் 1வது பதிப்பு. 1933.

PG- Russian Literature (In part)

ரஷ்ய இலக்கியம் (பகுதியாக) 1வது பதிப்பு. 1948.

PJ-PM. Languages and Literatures of Asia, Africa, Oceania & American Indian.

ஆசிய, ஆபிரிக்க கடல்சூழ் நாடுகளின் அமெரிக்க இந்திய மொழிகள், இலக்கியங்கள். 1வது பதிப்பு. 1935.

PM - Supplement-Index to Languages and -Dialects

அநுபந்தம் பிரதேச மொழிகளுக்குமான அட்டவணை. 2வது, பதிப்பு. 1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PN,PR, PS,PZ, - General literature, English and American Literatures, Fiction in English. Juvenile Literature.

பொது இலக்கியம், ஆங்கில அமெரிக்க இலக்கியங்கள், ஆங்கில நாவலிலக்கியம், சிறுவர் இலக்கியங்கள் 2வது பதி, 1976.

PQ - Part 1 French Literature.

பகுதி 1 பிரெஞ்சு இலக்கியம். 1வது பதி 1936.

PQ - Part 2 Italian and Spanish and Portuguese Literatures.

இத்தாலி போத்துக்கேய இலக்கியங்கள் 1வது பதிப்பு, 1942.

Q - Science.

விஞ்ஞானம் 6வது பதிப்பு 1973.

R Medicine

மருத்துவம் 3வது பதிப்பு 1952.

S-Agricuture-விவசாயம் 3வது பதிப்பு 1948.

T-Technology-தொழிநுட்பக்கம் 5வது பதி. 1971.

U-Military Sciences போர் விஞ்ஞானங்கள். 4வது பதிங்கள் 1974.

V-Naval Sciences கப்பற்படை விஞ்ஞானம். 3வது பதிப்பு 1974.

Z- Bibliography, Library Science.

நூல்விவரப்பட்டியல், நூலக விஞ்ஞானம் 4வது பதிப்பு. 1959.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நூலகங்களும் அவற்றின் சேவைகளும் சில குறிப்புகள்.

ந. செல்வராஜா.

தமிழ் பிரதேசங்களில் பாடசாலை நூலகங்கள் பற்றிப் பேசும் போது ஏகோபித்த குரலில் எம்முன் வைக்கப்படும் கருத்து பெரும்பான்மையான பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை என்பதாகும். இங்கு நூலகங்கள் என்ற பதத்தின் அர்த்தம் அவரவர் கருத்திற்கேற்ப மாறுபடுகின்றது. நூலகம் என்றதும் தனியானதொரு கட்டிடத்தையும் அதில் ஒழுங்காகவும், நிரைகளாகவும் அடுக்கப்பட்டிருக்கும் நூல்களுக்குக் காவலராக அமர்ந்திருக்கும் ஒரு ஊழியரையும் (பெரும்பாலும் அப்பாடசாலையின் பழைய மாணவர் அல்லது உயர் வகுப்பு மாணவர்) மனதில் உருவகப்படுத்திக் கொள்வர். வேறு சிலர், ஒரு வகுப்பு அல்லது ஒரு வகுப்பறையின் மரத்தடுப்புக்கு அப்பால் அல்லது அதிபரின் அறையில் ஒன்றிரண்டு புத்தக அலுமாரியில் வைக்கப்பட்டிருக்கும் நூல்களையும், சில பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் மனதில் இருத்திக் கொள்வர். பெரும்பான்மையான பாடசாலைகளில் நூலகம் இல்லை என்று கூறப்படும் கருத்து இத்தகைய நூலக அமைப்புக்கள் இல்லை என்பதையே மறைமுகமாகச் சுட்டி நிற்கின்றது.

இத்தகைய நூலகங்களை சகல பாடசாலைகளிலும் நிறுவுவதானால் அது பெரும் பணச்செலவுக்கு வழி வகுப்பதாகி விடும். பாடசாலைக்கு நூலகம் அத்தியாவசியமானது என்று கொள்கையளவில் சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருப்பினும் வேறு பல அவசியங்களுக்கு நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்க வேண்டிய தேவை ஏற்படும் போது நூலகத்தின் தேவையும், அதற்கான நிதி ஒதுக்கீடும் பின் தள்ளப்பட்டு விடுகின்றன. கடந்த காலங்களில் தமிழ் பிரதேசங்களில் பாடசாலை நூலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்து இது தெளிவாகப் புலப்படும். நகரத்தை அண்டிய பாடசாலைகள் நூலக சேவையை ஓரளவு விருத்தி செய்து கொண்டு வரும் அதே வேளை புறநகர்ப் பகுதிகளிலும், கிராமப் புறங்களிலும் அமைந்துள்ள ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளில் நூலக வசதி என்பது கேள்விக் குறியாகி நிற்கின்றது.

பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவம் காலத்திற்குக் காலம் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. தமிழ்ப் பிரதேசங்களில் சிறுவர் நூலகங்களின் பற்றுக் குறையை ஈடு செய்யத் தக்கது பாடசாலை நூலகங்களாகும். சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டும் பாடசாலைகள் அவர்களுக்கு நூல் வாசிப்புப் பழக்கத்தையும் படிப்படியாக ஊட்டத்தக்கதாக நூலக சேவையை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். பாடவிதானத்திற்குட்பட்ட கல்வியுடன் பொது வாசிப்பும் அவர்களுக்குப் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் என்ற கருத்து இன்று முன்நிலைப்படுத்தப்பட்டு வருவது கண்கூடு.

மாணவர்களின் பொது அறிவு விருத்திக்கும் அறிவுத் தேடுதலுக்கான அவர்களது ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் நூலக சேவை ஆரம்பப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். நூலகம் என்பதற்கு நாம் புதியதோர் அர்த்தத்தைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக நிதிப்பற்றுக் குறையால் நூலக வசதி இல்லையென வருந்திக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கு இத்தகைய புதிய அணுகுமுறை மிக அவசியமாகின்றது.

இன்றைய விஞ்ஞான உலகில் நூலகம் என்ற பதம் பௌதிக காரணிகளால் உருவாகும் கட்டிடத்தையோ நூல்களையோ மட்டும் குறிப்பதல்ல என்ற அடிப்படைக் கருத்தில் முதலில் தெளிவு பெறல் வேண்டும். நூல்களின் சேர்க்கைகள் மட்டுமே நூலகமாகும். என்ற நிலை காலம் கடந்தவொன்றாகும். இன்று நூலகங்களில் நூல் உருவில் காணப்படாத எத்தனை சாதனங்கள் சேர்க்கைக்கு உட்பட்டுள்ளன. புகைப்படங்கள், திரைப்படச்சுருள்கள், கசற் ஒலிப்பதிவு நாடாக்கள், வீடியோ ஒளிப்பதிவு நாடாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியங்கள், பத்திரிகை வெட்டுத் துண்டுகள், கையெழுத்துப் பிரதிகள் இப்படி ஏராளமானவை நூலகத்தின் சேர்க்கைகளாகி விட்டன. இத்தகைய சேர்க்கைகளின் ஒரு பகுதியே நூல்கள் என்ற நிலை இன்று ஏற்பட்டு விட்டது.

இந்த அபிவிருத்தியின் விளைவாக, நூல்களை வாசிக்கக் கொடுப்பதும், அதை மீளப்பெற்று வைப்பதும் ; தான் நூலகத்தின் சேவை என்ற நிலையும் மாறிவிட்டது. வாசகருக்குத் தேவையான தகவலைக் கொடுப்பதும் அவர் ஒரு தகவலைப் பெற வழிகாட்டுவதும் தான் நூலகத்தின் சேவை என்ற நிலை இன்று உருவாகிவிட்டது.

இந்த நிலையில் ஒரு பாடசாலையில் நூலக வசதி இல்லை என்று கூறிக்கொண்டு நூலகக் கட்டிடத்தையும், நூல் பெட்டிகளையும், அதை ஒழுங்குபடுத்திக் கட்டிக் காப்பதற்கு பாதுகாவலர்களையும் எதிர்பார்த்து இன்னும் எத்தனை வருடங்களுக்குக் காத்திருக்கப் போகின்றோம்?

நூலகக் கட்டடங்களும் நூல்களும் மட்டும் நூலக சேவையை வழங்கி விடாது என்ற கருத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மிக இலகுவாகப் பாடசாலைகளில் மாணவர்களின் அறிவு விருத்திக்குகந்த நூலக சேவையினை வழங்க முடியும். அதை எவ்வாறு வழங்கலாம் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரும்பாலான ஆரம்பப் பாடசாலைகளில் வகுப்பறைத் தட்டுப்பாடு காணப்படுவது இயல்பு. இத்தகைய பாடசாலைகளில் ஒரு கரும்பலகையோ அல்லது உட்சுவரில் ஒரு பகுதியோ ஆரம்ப நூலக சேவையை வழங்கப் போதியதாகும். நூலக சேவையை வழங்குவதற்கென தொண்டுள்ளம் கொண்ட ஓர் ஆசிரியர் தேவை. ஒரு பாடசாலையில் அத்தகைய ஒருவராவது இருக்க மாட்டாரா என்ன? சிறுவர்களுக்கான கவிதைகள், கதைகள், கட்டுரைகள், அறிவியல் துணுக்குகள் ஆகியவற்றைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தேடிப்பெற்றுக் கொள்வதும், சேகரித்துப்பாடசாலையில் வைத்திருப்பதும் ஆசிரிய நூலகரின் கடமையாகும். நாள்தோறும் அல்லது குறிப்பிட்டகால இடைவெளியில் கரும்பலகையில் அல்லது

சுவரின் ஒரு பகுதியில் ... 'ல் அவர் சேகரித்து வைத்திருக்கும் தகவல்களில் சிலவற்றை ஒட்டி வைத்து மாண வரின் பார்வைக்கு விடவேண்டும். சிறுவர் சஞ்சிகைகளில் தேர்ந்தெடுக்கப்படும் போட்டோஸ்ரட் பிரதி, தினசரிப் பத்திரிகைகளின் வார இதழ்களில் வரும் சிறு பகுதிகள், பொதுச் சஞ்சிகைகளில் வரும் சிறுவர் பகுதிகள் போன்ற வற்றிலிருந்து ஆசிரிய நூலகர் தமக்குத் தேவையான தகவல் களைப் பெற்றுக் கொள்ளலாம். தரமான சிறுவர் ஓவியங் கள், கார்ட்டூன்கள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்ற வற்றைத் தவிர்க்கக் கூடாது வெறும் அறிவுத்துறைத் தக வல்களை மட்டும் வெட்டி ஒட்டி விடுவதன் மூலம் சிறுவர்களின் நூல் ஆர்வத்தை வளர்க்க முடியாது. பொதுவான ... பொழுது போக்கு அம்சங்களும் கலந்து வழங்கினால் தான் ... எமது மூல நோக்கமான சிறுவர்களுக்கு வாசிப்புப் பழக் கத்தை ஏற்படுத்துதல் என்ற இலக்கை நோக்கி முன்னேற முடியும்.

சிறுவர்கட்கான சுவர்பத்திரிகைத் திட்டத்தினையும் ... இத்தகைய பாடசாலைகளில் அறிமுகப்படுத்தலாம். இத்திட் டத்தின் படி மாணவர்களின் ஆக்கங்களை கவர்ச்சியான வர் ணத்திலும், நலக்கமான எழுத்திலும் எழுதி சுவரின் ஒரு பகு தியில் ஒட்டி வைத்து எழுதும் ஆர்வத்தை வளர்க்கலாம். ... எழுத்தார்வம் மிக்கவர்கள் இத்திட்டத்தின் மூலம் தூண்டப் படுவர். அவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் ஒழுங்குபடுத்தப் பட்ட வழிகாட்டல் மூலமும் எதிர்காலத்தில் சிறந்த அறிஞராக மலர அத்திவாரம் இடலாம். எழுத்தில் ஆர்வம் குறைந்த வர்களும் தம் நண்பர்களின் ஆக்கம் கண்டு தாமும் தம்மை வளர்த்துக் கொள்ள வழி அமைக்கும் இத்திட்டத்தை ஆசிரிய நூலகர் மேற்கொள்ளலாம்.

இத்தகைய ஒரு வழித்திட்டத்தின் மூலம் வசதிமிக்க ஒரு நூலகத்தின் மூலம் கிடைக்கக் கூடியதான சேவையை, இருப்பதைக் கொண்டே சிறப்புற வழங்க நூலக வசதி குன்றிய ஒரு பாடசாலையால் முடியும்.

இனி நூலக வசதி ஓரளவு கொண்ட ஒரு பாடசா லையைப் பார்ப்போம். இங்கு சில நூல்களும், அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைப் பேணத்தக்க ஒரு அலுமாரியும் மட்டும் உள்ளன வென்று கொண்டால் இவற்றைக் கொண்டு எத்தகைய நூலக சேவையை வழங்கலாம் எனக்காண்போம். நூற் சேர்க்கை காலத்திற்குக் காலம் வளர்ந்து கொண்டு போவது இயல்பு. நூல் எண்ணிக்கையில் வளர்ச்சி மட்டும் கவனத்திற்கு எடுக்கப்படக் கூடாது. தரத்திலும் அவை வளர்ச்சியுற்று இருக்க வேண்டியது அவசியமாகும்.

பெரும்பாலான பாடசாலை நூலகங்களின் மொத்த நூற் தொகையின் பெரும் பங்கு ஆங்கில மொழியில் எழுதப்பட்ட நூல்களாக உள்ளன. இலவசமாகக் கிடைக்கும் வெளிநாட்டு அன்பளிப்புகளாலும், பெற்றோரால் வழங்கப்பட்ட நூல் அன்பளிப்புகளாலும் இவை ஏற்படுவது வழமை. தமிழ் மொழி மூலமான சிறுவர்க்குரிய நூல்களின் வெளியீடு குறைவானதால் இந்நிலைமை என்று கூறப்படுவதும் உண்டு. ஆனல் தமிழில் வெளியிடப்பட்ட அனைத்துச் சிறுவர் நூல்களும் அவற்றுள் உள்ளனவா என்று ஆராய்ந்தால் அவை கூட முறைமையாக இல்லாதிருப்பதைக் காணமுடியும். இதிலிருந்து சிறுவர் நூலகங்களுக்குரிய நூல்கள், பாடசாலை நூலகங்களில் திட்டமிட்டுச் சேர்க்கப்படாமையின் உண்மை நிலையினைப் புரிந்து கொள்ள முடியும்.

கொள்கையளவில் தமிழ் பிரதேசப் பாடசாலை நூலகங்களில் பெரும்பான்மையான நூல்கள் தமிழ் மொழி மூலம் இருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்பவர்கள் தமது பாடசாலையில் அத்தகைய நூல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் திட்டமிட்டு இறங்க வேண்டும்.

ஒரு பாடசாலையில் நூல் கொள்வனவு காலத்திற்குக் காலம் ஒட்டு மொத்தமாக மேற்கொள்ளப்படுகின்றன. பல பாடசாலைகள் தமது வருடாந்த பரிசளிப்புத் தேவைக்கென நூற் கொள்வனவு செய்யும் போது வர்த்தகர் வழங்கும் கழிவினைக் கருத்திற் கொண்டும், நூற்கொள்வனவுக்கெனச் செலவிடப்படும் நேரத்தைச் சேமிப்பதைக் கருத்திற் கொண்டும், நூலகத்திற்கான நூல்களையும் ஒன்றுகவே வாங்கி விடுகின்றனர். அன்றைய தினம் நூற்சந்தையில் என்ன நூல்கள் விற்பனைக்கு இருக்கின்றனவோ அவற்றில் தான் அவர்களது தெரிவையும் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இது மிகவும் வருந்தத்தக்க நிகழ்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற் கொள்வனவு இத்தகைய குறுகிய நோக்கம் கொண்ட நடை முறைகளினால் பலனற்றதும், பணவிரயம் மிக்கதுமாகின்றது.

பாடசாலை நூலகங்களில் நூற் கொள்வனவு இரு வழி முறைகளில் மேற் கொள்ளலாம். முதலாவது, மத்திய மயமாக்கப்பட்ட நடை முறை, இதன்படி கல்வித் திணைக்களம் அல்லது கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் அதிபரின் மூலம் மொத்தமாக சகல பாடசாலைகளுக்கும் தேவையான நூல்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்கலாம். இந்த நடைமுறையின் படி ஆண்டுக்கு இவ்வளவு தொகை என நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு அத்தொகைக்குள் காலத்திற்குக் காலம் பாடசாலை நூலகங்களுக்கேற்ற நூல்களைப் பரவலாகக் கொள்வனவு செய்யலாம். வெளியீட்டாளர்களும் தங்கள் நூல்களை இலகுவில் விற்பனை செய்யும் நோக்குடன் நூற் கொள்வனவுக்கு நியமனம் பெற்ற பாடசாலையை, அல்லது கல்வித் திணைக்களத்தை நேரடியாக அணுகித் தமது நூலின் கணிசமான பிரதிகளை விற்பனை செய்யலாம். இதன் மூலம் வெளியீட்டாளருக்கும் ஒரு நிச்சயமான சந்தை வாய்ப்புக் கிட்டுவது மட்டுமல்லாது சிறுவர் இலக்கியங்களின் வெளியீட்டிலும் ஆர்வம் காட்ட வாய்ப்பு ஏற்படும்.

இரண்டாவது நடைமுறை, ஒவ்வொரு பாடசாலைகளும் கணிசமானதொரு தொகையை வருடாந்த நூற் கொள்வனவுக்கென்று ஒதுக்கி, பரவலான கொள்வனவை மேற்கொள்ளல். வருடத்தின் பல்வேறு காலகட்டங்களில் நூலகத்திற்குப் பொறுப்பாயுள்ள ஆசிரியர் அல்லது நூலகரின் உதவியுடன் சிறுவர் இலக்கியங்களையும், அறிவு நூல்களையும் கொள்வனவு செய்வதன் மூலம் தமிழ் நூல்களைச் சேகரித்துக் கொள்ள முடியும்.

நிதிப்பற்றுக் குறை காரணமாகப் பல பாடசாலைகள் நூற் கொள்வனவில் நாட்டம் கொள்வதில்லை. அன்பளிப்பாகக் கிடைக்கும் நூல்களைப் பெற்றுச் சேர்ப்பதில் மட்டும் அக்கறை காட்டுவதுண்டு.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையம்-5.

---

க.சி.குலரத்தினம்.

இறுதியாகக் கூடிய காரிய நிர்வாக சபை.

---

மத்திய இலவச நூல் நிலையத்தை நகரசபையிடம் ஒப்படைத்த பின்னர் 22.04.35இல் டபிள்யூ.டி.நெல்ஸ் அவர்கள் தலைமையில் ஒரு காரிய நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பின்னர் 31.05.35இல் தலைவர் நீதவான் வி.குமாரசுவாமி அவர்கள் தலைமையில் இறுதியான நிர்வாக சபைக் கூட்டம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தாரிடம் எஞ்சியிருந்த பணத்தை கிராமசபைகளின் வாசிகசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கலாமா எனும் விடயம் பேசப்பட்டது. திரு என்.சின்னத்தம்பி அவர்கள் 125/-ரூபாவைக் கிராமச் சங்கங்களுக்கு கொடுக்கலாம் எனப்பிரேரித்ததை க.மு.செல்லப்பா அவர்கள் ஆதரிக்கவே பிரேரணை நிறைவேறியது. பின்னர் க.மு.செல்லப்பா அவர்கள் அதுகாறும் கௌரவ நூலகராகக் கடமையாற்றிய வி.எஸ். இராசரத்தினம் அவர்களுக்குப் பலமாதங்களுக்குப் பொதுவாக 75 ரூபாவை அலவன்சாகக் கொடுக்கலாம் எனப் பிரேரித்தார். இதைப் புறெக்டர் முருகேசம்பிள்ளை அனுமதித்தார். பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றது. பின்னர் க.மு செல்லப்பா அவர்கள் தங்களிடம் எஞ்சியிருந்த பணத்தை வடமாகாண அரசாங்க அதிபர் மூலம் கிராமசபைகளுக்கு வழங்க வேண்டுமெனப் பிரேரித்தார். இதனை கே.கனகசபை அவர்கள் அனுமதித்ததும், பிரேரணை ஏற்றுக்கொள்ளப் பெற்றது. பின்னர் தலைவர் வி. குமாரசுவாமி தங்கள் சங்கத்தைக் குலைக்கவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பொதுச்சபை கூட்டப்பட பெற வேண்டும் என்றும், பிரேரித்த பிரேரணை செல்லப்பா அவர்கள் அனுமதித்ததும் ஏற்றுக்கொள்ளப் பெற்றது. இத்துடன் பொதுச்சபை பின்னர் கூட்டப்பெறுமலேயே காரிய நிர்வாகசபைக் கடைசிக்கூட்டத்தோடு, 31. .35இல் நூல்நிலையச் சங்கம் குலைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரசபை நடத்திய நூல் நிலையம்.

---

நிர்வாகத் திறமை வாய்ந்த நகரசபைத் தலைவர் நல்லையா அவர்களும், நகரசபைக் காரியதரிசி என்னும் சக்கடத்தார் பாலசுப்ரமணியம் அவர்களும் நூல்நிலையத்தை நன்கு நடத்தப் பெரு முயற்சி எடுத்தனர்.

சக்கடத்தார் பாலசுப்ரமணியம் படிப்பார்வம் நிறைந்த பெரிய உருப்படியான மனிதர் எந்த நேரமும் பெரிய நூல்கள் இரண்டாவது அவரின் கையில் இருக்கும். நூலகத்திற்கு நல்ல நூல்களைத் தெரிவதில் அவருக்குத் தனி ஆற்றல் இருந்தது. அவற்றை முதலிற் சுவைப்பவரும் அவரே.

நிரந்தர நூலகர்.

---

நகரசபை பொறுப்பெடுத்து நடத்திய நூல்நிலயத்திற்கு அனுபவமும், பொறுப்பும் வாய்ந்த நூலகர் ஒருவர் உடனடியாகத் தேவையாயிருந்தது. முன்னர் கௌரவ நூலகராயிருந்த சி. எஸ். இராசரத்தினம் மெற்றிக்குலேசன் சித்தியடைந்திருந்தார். அவரையே நூலகராக நியமிக்க வேண்டும். என்பது பாலசுப்ரமணியம் அவர்களின் விருப்பம். ஆனால் பகிரங்கமாக விளம்பரப்படுத்தி விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, நேர்முகப் தெரிய வேண்டும் என்பது பொதுவிதி. காலமோ உத்தியோகம் கிடையாத காலம் பெரும் உத்தியோகத்தர் பலர் வேலையாட் குறைப்பினால் உத்தியோகமிழந்து வீட்டில் சோம்பியிருந்த காலம். பட்டதாரிகள் பலர் முப்பத்தைந்து ரூபாவிற்குப் பாடசாலைகளிற் படிப்பித்த காலம் அது.

நகரசபையார் நூலகர் வேலைக்கு விளம்பரஞ் செய்ததும் பட்டதாரிகள் உட்படப் பலர் விண்ணப்பஞ் செய்தனர். முன்னரே மனப்பதிவு பெற்றிருந்த சி. எஸ். இராசரத்தினம் அவர்கள் நேர்முகப் பரீட்சையின் பின் நூலகராகத் தெரியப் பெற்றார். அக்காலத்துக் கொடுத்த சம்பளம் மாதம் நாற்பது ரூபா. காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுமணிதொடக்கம் மாலை ஏழு மணிவரை நூலகர் கடமை. நூலகர் தனியொருவராய்த் தொழிலாளி வேலைகள், பணியாளர் வேலைகள், எழுத்தாளர் வேலைகள், மேற்பார்வை வேலைகள், பதிவு வேலைகள், நூல்களைத் தூசுதட்டி அடுக்கும் வேலைகள் யாவும் செய்து வந்தார். தேடித்தேடி, பிரதானவீதியில் சந்திக்கருகாமையில் அபூபக்கர் கட்டட விசாலமான முகப்புக் கடையொன்றில் மாதம் முப்பத்தைந்து ரூபா வாடகைக்கு எடுத்தார்கள் அது விசாலமானதாக இருந்த போதிலும் சந்தடியுள்ள சூழலில் அமைந்ததாகும்.

விசாலமான வேறு மண்டபம்.

படிப்பதற்கு ஏற்ற சுற்றுடலில் விசாலமான மண்டபம் தேடித்திரிந்த நகரசபையார், தமக்கென ஒரு பாரிய நகரசபை மண்டபத்தைக் கட்டி எழுப்பத் தொடங்கிய காலம் அது.

யாழ்ப்பாணம் வாடிவீட்டிற்குத் தென்திசையில் சைவ வித்தியா விருத்திச்சங்கக் காரியாலயக் கட்டடத்தின் அருகில் உள்ள மாடிக்கட்டடத்தின்மேல்மண்டபத்தைப் புத்தூர் மழவராயர் குடும்பத்தாரிடம் மாதம் அறுபத்தைந்து ரூபாவுக்கு வாடகையாகப் பெற்றார்கள்.

அம்மண்டபம் பெரியனவாய இரண்டு அறைகளையும் நீளமான விறாந்தையையும் கொண்டதாய், நல்ல காற்றோட்டமும் பிறவசதிகளும் கொண்டிருந்தது. அம்மண்டபத்தில் 1936அம் ஆண்டு முதல் நூலகம் நல்ல முறையில் நடைபெற்றுவந்தது.

நூல்கள் வேறாகவும், சஞ்சிகைகள் பத்திரிகைகள் வேறாகவும் வெவ்வேறிடங்களில் வைக்கப் பெற்றிருந்தன. வாசிப்போர் தொகை நாளுக்குநாள் பெருகிவந்தது என்பது அங்கே வருவோர் கையொப்பம் இடுவதற்கு வைக்கப் பெற்ற சீ.ஆர். கொப்பி கொண்டு அறியக்கூடியதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தில் பிரவேசித்த உறிட்லரும் முசோலினியும்.

மாடிவீட்டு மண்டபத்தில் நூலகம் நாளுக்கு நாள் நடைபெற்று வந்த காலத்தில் பல சுவையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அங்கே வாசிக்கச் சென்ற இளைஞர் இரு இருவர் ஒருவர் பின் ஒருவராய் உட்புகுந்து உறிட்லர் முசோலினி என்று கையொப்பம் இட்டு அமைதியாகப் புகுந்து படித்துவிட்டு வெளியேறினர்.

உறிட்லர், முசோலினியின் கையொப்பங்களைக் கண்டதும் நூலகருக்கு வெயர்த்துக் கொட்டியது. தம் கண்காணிப்பில் இப்படி நடந்ததே என்று கலங்கினர். எனினும் சித்தங்கலங்காது உறிட்லரையும் முசோலினியையும் எது விதத்திலும் கண்டுபிடிப்பதற்கு வழி வகுத்தார்.

மூன்றும் நாள் இருவரும் அகப்பட்டுக் கொண்டனர். அவர்களுக்குத் தண்டனை விதிப்பதற்கு வேறுவழியில்லாமையால் அவர்கள் மண்டபத்திற்குள் கால் வைத்தல் ஆகாது எனத் தடை விதித்தார். அவர்கள் பெயர்களை அறிந்து அறிவித்தல் பலகையில் தடையுத்தரவை எழுதி ஒட்டியிருந்தார். இளைஞர் இருவரும் அதன்பின் அந்தப்பக்கம் தலை காட்டவே இல்லை. அக்காலத்துச் சிட்டாசாரம் என்னும் ஒழுக்கம் அத்தகையது

உறங்கும் நாற்காலிகள்.

ஆங்கிலத்தில் ஈசிசெயர் எனும் சோபா என்றும் வழங்கும் நீண்ட நாற்காலிகள் வயது முதிர்ந்தவர்களுக்கு வசதியாக அங்கே இருந்தன. ஒருநாள் இளைஞன் ஒருவன் அதிலே சாய்ந்து படித்துப்படித்த பின் புத்தகத்தை நெஞ்சிலே உறங்கவைத்துவிட்டுத் தானுறங்கிக் குறட்டையும் விட்டபடி கிடந்தார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த, திரு. ஜோன் செல்வராசாவுக்கு
அஞ்சலி.

மட்டக்களப்பு பொது நூலகத்தில் பிரதம நூலக ராகக் கடமையாற்றி வந்த, திரு. ஜோன் செல்வராசா, கடமைக்காகச் செல்லும் வழியில் பொலனறுவைக் காட்டுப் பகுதிக்கண்மையாகச் சிங்களக் காடையர்களினால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்டுத் தன்னுயிரை விட்டார் என்ற செய்தி நூலக உலகிற்கு ஒரு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

பழகுவதற்கு இனியவராகவும், பண்புடையவராகவும் விளங்கிய இவர் தமது நூலகக் கல்வி, பதவி பெற்றதுடன் நிற்கவில்லை. என்பதைப் புலப்படுத்தும் வகையில் அவர் பதவி வகித்த பொது நூலகங்களான திருகோணமலை பொது நூலகம், சங்கானைப் பொதுநூலகம், மட்டக்களப்பு பொது நூலகம் ஆகியவற்றில் தமது ஆளுமையின் முத்திரையை யைப் பொறித்துச் சென்றுள்ளார். இறுதியாக இவர் கடமையாற்றிய மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்திற் குத் தனது பங்களிப்பைச் செலுத்தும் முகமாக மட்டக்களப்பு சார்பாக விரிவானதொரு நூற்தொகையினைத் தொகுத்து அம்மாவட்ட அரசாங்க அதிபரிடம் வெளியிடும்படி கையளித் துள்ளார். சிலர் பதவிகளினால் பெருமையடைகின்றனர். ஆனால் ஒரு சிலரோ பதவிகளைப் பெருமைப்படுத்துகின்றனர். மறைந்த செல்வராசா இரண்டாவது வகையினைச் சார்ந் தவர் என்பது வெள்ளிடைமலை.

மறைந்த செல்வராசாவினது மறைவு நூலகர்களுக் கும், நூலகவுலகுக்கும் முக்கியமாகப் பொதுசன நூலகங் களுக்கும் பேரிழப்பாகும். தமது பங்களிப்பினைச் செய் யத் தொடங்கியவுடனேயே காலன் இவரது உயிரைக் கவர்ந்து சென்று விட்டான். இதனால் யாழ்ப்பாணக் கல் கல்லூரி திறன்மிக்க மாணவர் ஒருவரை இழந்துள்ளது.

நவாலிக் கிராமம் சமூகசேவகனைப் பலிகொடுத்துள்ளது. நூலகவுலகம் தலைசிறந்த நூலகரொருவரை இழந்துள்ளது அவரது குடும்பம் பண்பும், பொறுப்புமிக்க தலைவனைப்

பறிகொடுத்துத் தவித்து நிற்கின்றது. நாம் செய்யக் கூடியது ஆறுதல் வார்த்தைக் கூறித் தேறுதல் சொல்வதொன்றுதான்.

அன்னாரது பாரியாருக்கும் பிள்ளைகட்கும், உறவினர்களுக்கும் நூலகர்கள் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது பரிசுத்த ஆத்மா இறைவனடியில் சாந்தியடைவதாக எனப் பிரார்த்திக்கின்றோம்.

கலாநிதி. வே. இ. பாக்கியநாதன்.




நூல் அறிமுகம்.

நூல்: கலைச்சொற்றொகுதி: நூலகமும் தகவல் விஞ்ஞானமும்.

ஆசிரியர்: விமலாம்பிகை பாலசுந்தரம்.

வெளியீட்டாளர்: அயோத்தி நூலக சேவைகள். ஆனைக்கோட்டை.

பதிப்பு: மார்ச், 1989.

விலை: ரூபா, 30.00

பக்கம்: 46. அளவு 27x20 சமீ.

நூலக, தகவல் விஞ்ஞானத் துறைகளைக் கற்போருக்கும் பயன்படக்கூடிய வகையில் சுமார் 1400 ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ் பதங்கள் தரப்பட்டுள்ளன. இத்துறையில் தமிழில் வெளிவந்துள்ள முதலாவது தொகுப்பு இதுவாகும்.

## நூல் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் 4
இதழ் 3

மார்ச்
1989




ஆண்டு சந்தா 30/-
தனிப்பிரதி 10/-
(தபாற் செலவு
உட்பட)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org